அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 233/2019

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.P.காயத்திரி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 05–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

வா.சா.1 05.11.2025

பெயர் ஹரிஸ் தந்தை/ கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

12ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–

1. 3ம் பிரதிவாதி எனது தந்தை என்றாலும் நானும் 3ம் பிரதிவாதியும் ஒரே விலாசத்தில் தான் உள்ளோம் என்றாலும் சரிதான், தனிதனிபோர்சனில் உள்ளோம். எனது அப்பா செலவு செய்து எனது அக்காவின் திருமணம் நடந்ததா என்றால் எனது அம்மா மற்றும்அப்பா செலவு செய்தார்கள். எனது அம்மா house wife ஆக உள்ளார். தாவா சொத்தில் வாதிகளுக்கு பங்கு உள்ளது என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் பிரதிவாதிகளுக்கு அனுப்பினேனா என்றால் இல்லை. எனது அப்பாவிற்கு அனுப்பிய அறிவிப்யை சேசம்மால் என்பவர் கையொப்பம் செய்து பெற்றதாக வா.சா.ஆ 7 AD card ல் உள்ளது என்றால் அது யார் என்றால் எனக்கு தெரியாது.

2. தாவா சொத்து சம்மந்தமாக பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தான் தாக்கல் செய்துள்ளேன். எதற்காக நான் வில்லங்க சான்று அப்ளை செய்தேன் என்றால் சொத்தின் நிலவரத்தை தெரிந்து கொள்வதற்காக. எனது தாத்தா பெயரில் உள்ள சொத்து பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு 14 வயதில் இருந்து தெரியும். எனது தாத்தா சொத்து பெரிய சொத்து என்பதால் எனது அப்பா மற்றும் அவருடன் பிறந்தவர்கள் ஒவ்வொறு மனையாக லேயவுட் போட்டு விற்றுவந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது அக்கா திருமணம் ஆனபோது அவருக்கு எனது தாத்தாவின் சொத்துவிவரங்கள் தெரியுமா் என்றால் குறிப்பிட்டுஎல்லா சொத்து விவரங்களும் தெரியாது.

3. வழக்கு சொத்து எப்போது கிரையம் செய்யப்பட்டது என்றால் 2011 வருடத்தில் கிரையம் செய்வதற்கு பவர் கொடுக்கப்பட்டது. 2011 வருடத்தில் இருந்து கிரையம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள் எனக்கு அந்த விவரம் 2019 வருடத்தில் தான் தெரியும். தாவா சொத்து 4.92 ஏக்கர் விஸ்திரனம் கொண்டது. அதில் எத்தனை மனைகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. 12ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட பவர் பத்திரத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ 3 பவர் பத்திரம் யார் விண்ணப்பம் செய்து பெற்றது என்றால் நான் தான் விண்ணப்பித்து பெற்றேன்.

4. ஸ்ரீநிவாசன் என்பவர் வாங்கியதாக வா.சா.ஆ 3 சான்றிட்ட நகலில் குறிப்பு உள்ளது என்றால் சரிதான். எனவே வா.சா.ஆ 3 பவர் பத்திரத்தை ஸ்ரீநிவாசன் என்பவர் தான் விண்ணப்பித்து பெற்றார் என்றால் நான் என் தந்தையிடம் கேட்டு விண்ணப்பித்தேன். எனவே எனக்கும் எனது தந்தைக்கும் பேச்சுவார்த்தை உள்ளது என்றால் அவர் என் தந்தை

என்பதால் எனது தேவைகளை எனது தந்தையிடம் தான் கேட்கமுடியும். அப்போது ஏன் தாவா சொத்தை என்தந்தையிடம் கேட்க வில்லை என்றால் எனக்கு தெரியாமல் அவர் சொத்தை விற்று விட்டார்.

5. அவ்வாறு என் தந்தை எத்தனை மனைகளை விற்றார் என்றால் நான் தேடிக்கொண்டு இருக்கிறேன். குறிப்பிட்டு தெரியாது. வில்லங்க சான்று போட்டால் அந்த விவரம் தெரியும் என்றால் சரிதான். அனைத்து சொத்திற்கும் போட்டு பார்க்கவேண்டும். நான் அவ்வாறு வில்லங்க சான்று அனைத்து சொத்திற்கும் போடவில்லை என்றால் சரியல்ல செய்துகொண்டிருக்கிறேன். 12ம் பிரதிவாதிக்கு கொடுத்த பவரை ரத்து செய்ய கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதற்காக தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் கூறியவாரு பவர்பத்திரத்தை ரத்து செய்யவும் பாகபிரிவினை பிரகாரம் கோரியும் இந்தவழக்கு தாக்கல செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. வழக்கு சொத்து சம்மந்தப்பட்டவர்களை கட்சி சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துவிட்டதால் வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நானும் என்தந்தையும் ஒன்று சேர்ந்து 1,2 , 12 பிரதிவாதிகளை ஏமாற்றுவதற்காக இந்தவழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் எனக்கு சொத்தின் மீது அக்கரை இருந்தால் ஏற்கனவே விற்கப்பட்ட மனைகளுக்கும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. இனி வேறுவழக்கு தாக்கல் செய்யவேண்டும். எனது தந்தை சொத்தை விற்று பணத்தை பெற்று அதில் வாதிகள் அனைவரும் பயன்அடைந்துவிட்டதால் நான் இந்த வழக்கு தாக்கல் செய்ய உரிமை இல்லை என்றால் சரியல்ல.

7. 2012 வருடத்தில் 12ம் பிரதிவாதி மூலம் என் தந்தை 1,2

பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்றாலும் காலதோசத்தை மறைப்பதற்காக அதனை நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ1 லேயவுட்டில் எத்தனை மனைகள் உள்ளது என்றால் தெரியாது. வா.சா.ஆ 2 சிட்டாவில் உள்ள கோவிந்தன் வீராசாமி ஆகிய நபர்களின் வாரிசு சான்றிதழில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.